**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

முன்னிலை- **திரு. கி. ஆனந்த், எம்.எல்.,**

நீதித்துறை நடுவர், வள்ளியூர்.

2023 ம் வருடம் ஜுன் திங்கள் 07 ம் நாள் புதன்கிழமை

**சி.ஆர். எம்பி எண். 9542/2022**

**CNR No.** TNTL09-007241-2022

காவல் உதவி ஆய்வாளர்,
பழவூர் காவல்நிலையம், பழவூர்
குற்ற எண். 241/2017 .....மனுதாரர்/ புகார்தாரர்

/எதிர்/

பெரியசாமி ..... எதிர்மனுதாரர்/ எதிரி

இம்மனுவானது 07.06.2023 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பி ஆஜராகவில்லை என்பதால் ஒருதலை பட்சமாக்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் ஆவணங்கள் ஆகியவை பரிசீலனை செய்து இது நாள்வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து கோப்புக்கு எடுக்க உத்தரவிடக்கோரி இந்த மனுவை மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

**மனுவின் சுருக்கம்**

2. மனுதாரர் இந்த வழக்கின் புகார்தாரர் எனவும், எதிர்மனுதாரர் இந்த வழக்கின் எதிரி எனவும், இந்த மனுவை மனுதாரர் 473 Crpc ன் கீழ் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் பழவூர் காவல்நிலைய குற்ற எண். 241/2017 ல் இதச பிரிவுகள் 341, 294(b), 323 படியான வழக்கை 24.11.2017 ம் தேதி விசாரணை முடித்து குற்றப்பத்திரிக்கையானது கொரோனா காரணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் நிலைய வழக்கு கோப்பில் இருந்துள்ளது என்பதால் மேற்படி வழக்கினை பிரிவு 473 சி.ஆர்.பி.சி ன்படி நீதிமன்றத்தில் காலதாமதத்தை மன்னித்து

கோப்பிற்கு எடுக்க வேண்டி இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பியும் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**4. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதேயாகும்,**

5. மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6. மேற்படி வழக்கானது கொரோனா காரணமாக காவல்நிலையத்தில் இருந்து வந்ததால் இதுவரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாமல் இருந்து வந்துள்ளதாகவும், மேற்படி வழக்கினை பிரிவு 473 சி.ஆர்.பி.சி ன்படி நீதிமன்றத்தில் காலதாமதத்தை மன்னித்து கோப்புக்கு எடுக்க வேண்டி புலன்விசாரணை அதிகாரியால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து எதிர்மனுதாருக்கு அறிவிப்பு அனுப்பியும் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜராகி ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதாலும், புகார்தாரர் இறுதியறிக்கையை காலதாமதத்திற்குண்டான போதுமான காரணத்தை மனுவில் சொல்லியுள்ளதாலும், இந்த வழக்கு கோப்பானது கொரோனா காரணமாக காவல்நிலையத்தில் இருந்துவிட்டதாலும், இரு தரப்பும் கேட்கப்பட்டு முடிவு செய்யப்படவேண்டியது என்பதாலும், இது குற்ற வழக்கு என்பதால் இந்த மனுவை அனுமதிப்பது நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே இறுதியறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கான காலதாமதத்தை மன்னித்து இந்த இறுதியறிக்கையை இந்த நீதிமன்றம் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடப்படுகிறது .

**எனவே இம்மனுவானது மேற்கண்டவாறு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது**.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2023 ம் ஆண்டு ஜுன் திங்கள் 07 ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2023.06.07 18:50:29 +0530

நீதித்துறை நடுவர்,

வள்ளியூர்